# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 01.10.2010 அன்று
## ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

இன்று மஜ்லிஸ் U.K.-ன் அன்சாருல்லாஹ் மற்றும் லஜ்னா இமாயில்லாஹ் இஜ்திமா ஆரம்பமாகின்றது. இதேபோன்று உலகின் வேறு சில நாடுகளிலும் இஜ்திமாக்கள் நடைபெறுகின்றன. இவ்விரு கிளை அமைப்புகளும் மிக முக்கியத்துவம் வாய்ந்த அமைப்புகளாகும். ஜமாஅத்தின் முன்னேற்றம், கல்வி, மார்க்கப் பயிற்சி மற்றும் இளம் தலைமுறையினரின் சீர்திருத்தம் போன்றவற்றில் பெண்கள், ஆண்களில் குறிப்பாக 40 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் முக்கிய பங்கு வகிக்கின்றார்கள். நமது ஆண்களும் பெண்களும் தங்களுடைய இந்த பொறுப்புகளை உண்மையான பொருளில் உணர்ந்து தமது கடமைகளின் பக்கம் முழு கவனம் செலுத்தி அதனை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்தால், ஜமாஅத்தோடு இளம் தலைமுறையினரின் தொடர்பு, உண்மையிலும் விசுவாசத்திலும் அவர்களின் முன்னேற்றம் தொடர்பான உத்திரவாதம் கிடைத்து விடும்.

ஜமாஅத்தின் முன்னேற்றத்தைப் பொருத்தவரை அது இறைவன் நிர்ணயித்த ஒன்றாகும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் உண்மைத் தொண்டரின் வருகையின் மூலம் இஸ்லாம் வெற்றி பெறும் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடத்தில் அல்லாஹ் வாக்குறுதி வழங்கியிருப்பது போல் இஸ்லாத்தின் வெற்றி தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடமும் அல்லாஹ் வாக்குறுதி வழங்கியுள்ளான். எனவே ஜமாஅத்தின் வெற்றி என்பது உறுதியானதாகும். இன்-ா அல்லாஹ். பிற இறை அமைப்புகளுக்கு (இதற்கு முன்) வழிப்பாதையில் கடினங்கள், சோதனைகள் ஏற்பட்டது போன்று அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கும் அவ்வப்போது இத்தகைய கடினங்களை கடந்து செல்ல வேண்டியதுள்ளது. நெருப்பு மூட்டப்படுகிறது. ஆனால் அந்த நெருப்பினை அல்லாஹ் குளிரச் செய்து விடுகிறான். அல்லாஹ் அந்த நெருப்பை தணிப்பது மாத்திரமல்ல. மாறாக ஒரு நம்பிக்கையாளர் இதுபோன்று கடினங்களையும் சோதனைகளையும் சந்திக்கும்போது அவரை மெருகேற்றி விடுகின்றான். நம்பிக்கையாளர்களுக்கு சோதனை வரும் என்று இவ்விஷயத்தை அல்லாஹ் திருக்குர்ஆனிலும் கூறியுள்ளான்.

**அல்லாஹ் அதிகாரம் 29 வசனங்கள் 3, 4-ல் கூறுகின்றான்:**

**நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம் என்று கூறுவதனால் அவர்கள் விட்டுவிடப்படுவார்களென்றும், அவர்கள் சோதனைக்கு ஆளாக்கப்படமாட்டார்கள் என்றும் இக்காலத்து மக்கள் எண்ணுகின்றனரா?**

**அவர்களுக்கு முன்னிருந்தவர்களை நாம் சோதித்தோம். எனவே இப்பொழுதும் நிச்சயமாக அல்லாஹ் உண்மையாளர்களை வெளிப்படுத்துவான். மேலும் அவன் பொய்யர்களையும் வெளிப்படுத்துவான். (29 : 3,4)**

எனவே உண்மையாளர்களையும் பொய்யர்களையும் வெளிப்படுத்த சோதிப்பது அல்லாஹ்வின் நியதியாகும். ஈமானில் உறுதியுள்ளவர்களை இந்த சோதனை இறை தொடர்பில் முன்னேறச் செய்கின்றது. அவர்களுடைய ஈமான் மேலும் அதிகரித்து விடுகின்றது. மேலும் ஈமானில் பலவீனமானவர்கள் மற்றும் குறையைத் தேடுபவர்கள் ஏதாவது ஒருவகையில் அதிருப்தியிலேயே மூழ்கியிருப்பார்கள். இவ்வாறு ஆட்சேபனை செய்யக் கூடியவர்கள் எல்லா ஜமாஅத்திலும் சிறிய எண்ணிக்கையில் உள்ளனர். சின்னச்சின்ன விஷயங்களில் குறையைக் காண்கின்றனர். சிறிய பொறுப்பாளர்களிடமும் குறையைத் தேடுகின்றனர். உயர் பொறுப்பாளர்களிடமும் குறையைத் தேடுகின்றனர். இவ்வாறு ஆட்சேபனை செய்து செய்து அதில் முன்னேறி

அவர்களுடைய ஈமானும் ஆபத்திற்குள்ளாகி விடுகிறது. அல்லாஹ்வின் தனிப்பட்ட அருள் இல்லாதிருந்தால் அல்லாஹ்வினால் ஏற்படுத்தப்பட்ட ஜமாஅத்தின் உண்மைத்துவத்தின் மீதே சந்தேகம் கொள்கின்ற அளவிற்கு அவர்களின் நிலை மோசமாகி விடுகின்றது. அதேபோன்று எதிரிகளினால் ஏற்படும் துன்பங்களும், வெறுப்புகளும் பலவீனமான ஈமான் கொண்டவர்களை சோதனைக்கு உள்ளாக்கி விடுகின்றது. எனவே ஒரு நம்பிக்கையாளர்களுக்கு வருகின்ற சோதனை என்பது அவரை உறுதிப்படுத்துவதற்கும், இறைநெருக்கத்திலும் அவரை மேலும் முன்னேறச் செய்வதற்குமே ஆகும். அதே போன்று ஜமாஅத் அளவில் ஏற்படுகின்ற சோதனை என்பது ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கு புதிய வழிகளைத் திறந்து கொடுப்பதற்கே ஆகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எவர்கள் இறை சோதனையில் வெற்றி பெற்றுவிடுகின்றார்களோ அவர்களுக்கு அதன் பிறகு எல்லா வகையான மகிழ்ச்சியும் செழிப்பும் கிடைக்கும். மேலும் ரஹ்மத் மற்றும் அருளின் வாசல்கள் அவர்களுக்கு திறக்கப்பட்டு விடும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பிறிதோரிடத்தில் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுபவித்த துன்பங்களின் விளைவாகவே மக்கா வெற்றி கொள்ளப்பட்டது.

ஆக, நபிமார்கள் மற்றும் அவர்களின் ஜமாஅத்திற்கு ஏற்படுகின்ற சோதனை என்பது வெற்றியின் வழிகளைத் திறந்து கொடுப்பதற்காகவே ஆகும். நாம் நமது கடமைகளை நிறைவேற்றியவாறு வழியில் ஏற்படும் சோதனைகளை வெற்றிகரமாக கடந்து செல்ல முயற்சி செய்து கொண்டிருந்தால் கருணை மற்றும் அருளின் வாசல்கள் நமக்காகவும் திறக்கப்படும்.

நானும் எனது தூதரும் வெற்றி பெற்றே தீருவோம் என்று அல்லாஹ் கூறியதோடு அந்த நிச்சய வெற்றிக்கு காரணமாக, அல்லாஹ் ஆற்றல் வாய்ந்தவனும், வல்லமை மிக்கவனும் ஆவான் என்று கூறியுள்ளான். எனவே அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பியுள்ளான். அன்னாரால் தோற்றுவிக்கப்பட்ட ஜமாஅத் நிச்சயமாக வெற்றி பெறும் என்பதை எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள். வழியில் ஏற்படுகின்ற கஷ்டங்கள் என்பது வெற்றியின் அடையாளங்கள் ஆகும். நாம் தக்வாவில் நிலைநின்றவாறு நமது பிள்ளைகளின் சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் செலுத்தி அவர்களை ஜமாஅத் அமைப்பின் ஓர் அங்கமாக ஆக்கிக் கொண்டால், நாம் அல்லாஹ்வின் கருணையையும் அருளையும் பெறக் கூடியவர்களாக இருப்போம் இன்ஷா அல்லாஹ். நாமும் நமது பிள்ளைகளும் வெற்றிகளை காணக்கூடியவர்களாக இருப்போம் இன்ஷா அல்லாஹ். நம்மில் சிலர் வாழ்க்கையின் கடைசி நிலையை அதாவது முதுமையை அடைந்தவர்களாக உள்ளனர். பொதுவாக மரணம் என்பது எவருக்கு எப்போது வரும் என்று யாரும் கூற இயலாது. ஆனால் முதுமையை அடைந்தவர்களுக்கு அதிக வாய்ப்புள்ளது. ஆக எப்படியிருப்பினும், இந்நிலையை அடைந்தவர்களுக்கு (முதியவர்களுக்கு) தமது பிள்ளைகளின் உலக வாழ்க்கை தொடர்பாக அதிக கவலை இருக்கும். இதேபோன்ற கவலை தமது பிள்ளைகளின் மார்க்கநிலை மற்றும் ஜமாஅத்தோடு பிள்ளைகள் தொடர்புடையவர்களாக ஆவது தொடர்பாகவும் இருக்க வேண்டும். உலகியல்ரீதியாக தமது பிள்ளைகள் சிறந்து விளங்க, சொத்து, வீடு, நல்ல வேலைவாய்ப்பு போன்றவை கிடைக்கப் பெரியவர்கள் கவலைப்படுகின்றார்கள். துஆவுக்காக எழுதுகின்றனர். நம்முடைய மற்றும் நமது பிள்ளைகளின் முன்னேற்றம் என்பது நாம் ஜமாஅத்துடன் எல்லா நிலையிலும் வைத்துள்ள உறுதியான தொடர்பை சார்ந்ததாக உள்ளது. ஜமாஅத் மற்றும் இஸ்லாத்தின் வெற்றி என்பது அல்லாஹ்வின் வாக்குறுதியாகும். அது அல்லாஹ்வின் நியதியாகும். அது எல்லா ஆற்றல்களும் வாய்ந்த இறைவனின் நியதியாகும். நம்மில் எவராவது கஷ்டங்கள், சோதனைகளைக் கண்டு பலவீனத்தை வெளிப்படுத்தினாலோ அல்லது நம்முடைய பிள்ளைகள் நமது ஈமானின் பலவீனத்திற்கு காரணமாக ஆகிவிட்டாலோ அல்லது நாம் தர்பிய்யத்தின் கடமைகளை சரிவர நிறைவேற்றாதது நம்முடைய பிள்ளைகளை

மார்க்கத்திலிருந்து விலக்கி தொலைவில் கொண்டு சென்றாலோ அல்லது ஏதாவது ஒரு சோதனை நமக்கோ அல்லது நமது பிள்ளைகளின் தடுமாற்றத்திற்கு காரணமாகி விட்டாலோ அதனால் மார்க்கத்தின் வெற்றி என்ற இறை தீர்ப்பில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது. ஆம்! எவர் பலவீனத்தை வெளிப்படுத்துகின்றார்களோ அவர் இழப்பிற்குரியவர் ஆகிவிடுவார்கள். மேலும் அல்லாஹ் வேறு ஒருவரை அந்த பணிக்காக தேர்ந்தெடுத்து விடுகின்றான். ஒரு புதிய சமுதாயத்தை அந்த பணிக்காக கொண்டு வந்துவிடுவான். இது மிகவும் முக்கியமான விஷயமாகும். இதனை எப்போதும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இதனை கவனத்தில் கொண்டு தத்தமது பிள்ளைகளின் சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமாகும். இவ்விஷயத்தில் நம்முடைய தூய முன்மாதிரி முக்கிய பங்கு வகிக்கின்றது. 40 வயதில் அன்சாருல்லாஹ் அமைப்பில் ஒருவர் நுழைந்து விடுகின்றார். அன்சாருல்லாஹ் என்ற பருவம் எப்படிப்பட்டதென்றால் மனிதன் பக்குவமடைந்து விடுகின்றான். எண்ணங்களில் தெளிவு கிடைத்து விடுகின்றது. இந்த நிலை ஏற்பட்ட பிறகு அன்சாருல்லாஹ்வினருக்கு மறுமையைப் பற்றி கவலை ஏற்பட்டு விட வேண்டும். அல்லாஹ்வின் மீதுள்ள நம்பிக்கை மற்றும் இறையச்சத்தில் முன்னேற முயற்சிக்கும் ஒரு நம்பிக்கையாளருக்கு இந்த சிந்தனையும், செயலும்தான் இருக்க வேண்டும்.

ஓர் அஹ்மதி தனது பைஅத் உடன்படிக்கையில் தக்வாவில் முன்னேறுவேன்; உயர் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துவேன் என்று வாக்குறுதி செய்துள்ளார். எனவே பொதுவாக ஒவ்வொரு அஹ்மதிக்கும் அதிலும் குறிப்பாக அன்சாருல்லாஹ் என்ற பக்குவமடைந்த பருவத்தை அடைந்த ஒவ்வொருவருக்கும் இந்த சிந்தனை மேலோங்கி இருக்க வேண்டும். ஏனென்றால் அன்சாருல்லாஹ் என்ற வயது எப்படிப்பட்டதென்றால் அல்லாஹ்வுக்காக நாங்கள் உதவியாளர்கள் ஆவோம் என்ற அறிவிப்பை செய்கின்ற வயதாகும். எனவே அப்படிப்பட்ட நிலையை அடைந்தவர்கள் எப்பொழுதும் பைஅத் உடன்படிக்கையை கருத்தில் கொள்ள வேண்டும். பைஅத் உடன்படிக்கையின் சுருக்கம் என்ன? ஷிர்க்கிலிருந்து தவிர்ந்து கொள்ளுதல், பொய்யிலிருந்து தவிர்ந்து கொள்ளுதல், சண்டை, சச்சரவுகள் மற்றும் அநீதியிலிருந்து விலகுதல், நம்பிக்கை துரோக்கத்திலிருந்து தப்பித்தல், குழப்பம் மற்றும் கிளர்ச்சி செய்தல் போன்றவற்றிலிருந்து தவிர்ந்து கொள்ளுதல், மன உணர்ச்சிகளை கட்டுப்படுத்துதல், ஐவேளை தொழுகைகளை நிறைவேற்றுதல், தஹஜ்ஜுத் தொழுகையை நிறைவேற்றுவதன் பக்கம் கவனம் செலுத்துதல், இஸ்திக்ஃபார் (பாவமன்னிப்பு) வேண்டுதல், ஸலவாத் ஓதுவதன் பக்கம் கவனம் செலுத்துதல் அல்லாஹ்வின் தூய்மையை எடுத்துரைப்பது, அல்லாஹ்வை புகழ்வதன் பக்கம் கவனம் செலுத்துவது, ஏழ்மை, செல்வ செழிப்பு எல்லா நிலையிலும் இறைவனிடத்தில் விசுவாசமாக இருப்பது, திருக்குர்ஆனின் கட்டளைகளின்படி அமல் செய்தல், ஆணவம் மற்றும் தற்பெருமையில் இருந்து தவிர்ந்து கொள்ளுதல், பணிவையும், நல்லொழுக்கத்தையும் வெளிப்படுத்துதல், அல்லாஹ்வின் திருப்திக்காக படைப்பினத்தின் மீது அனுதாபம் கொள்ளுதல், ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுக்கு முழுமையாக கட்டுப்படுவது, இதுதான் பைஅத் நிபந்தனைகளின் சுருக்கமாகும். சிந்தித்துப் பார்த்தால் இவ்விஷயங்கள் ஒரு மனிதனின் தக்வாவில் முன்னேற்றத்திற்கு காரணமாக இருப்பதை உணர முடியும். இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் ஓர் அஹ்மதியிடமிருந்து எதிர்பார்க்கும் குறைந்தபட்ச தரமாகும். மக்களிடத்தில் இவ்விஷயங்களை ஏற்படுத்துவதுதான் அன்னாரின் வருகையின் நோக்கமாகும். ஒருவர் அன்னாரிடம் பைஅத் செய்து தக்வாவில் முன்னேற வேண்டும் என்று தான் அன்னார் எதிர்பார்க்கின்றார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

மனிதனிடத்தில் இறையச்சம் தோன்றச் செய்வதற்காகவும் அதுவும் பாவங்களிலிருந்து மனிதனை பாதுகாக்கின்ற தக்வா தோன்றுவதற்காகவும் தான் அல்லாஹ் என்னை அனுப்பியுள்ளான். இறைவன் (மனிதனிடத்தில்) உண்மையான தக்வாவைதான் எதிர்பார்க்கின்றான்.

அதாவது அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக உள்ளத்திலிருந்து எழக்கூடிய ஓசைதான் அந்த உண்மையான தக்வாவாகும். இப்படிப்பட்ட தக்வாவைத் தான் அல்லாஹ் எதிர்பார்க்கின்றான். இந்த இறைவணக்கங்கள், ஷிர்க்கிலிருந்து தப்பித்தல் அல்லது உயர் நல்லொழுக்கங்களை வெளிப்படுத்துதல்

இவை அனைத்தும் அல்லாஹ்வின் மீது கொண்ட அன்பு மற்றும் தொடர்பின் காரணமாக இருக்க வேண்டும். நம்பிக்கையாளர்கள் எல்லாவற்றையும் விட அதிகமாக அல்லாஹ்வை நேசிக்கின்றார்கள் என்ற அல்லாஹ்வின் கூற்றிற்கேற்ப ஈமானின் நிலை இருக்க வேண்டும்.

மேலும் அல்லாஹ்வின் மீதான அன்பில் முன்னேற்றம் அடைவதுடன் ஈமானிலும் நம்பிக்கையாளர்கள் முன்னேற்றம் அடைகின்றார்கள். இவ்வாறு ஈமானின் முன்னேற்றம் தக்வாவின் முன்னேற்றத்திற்கு காரணமாக அமைகின்றது. எனவே இவ்வாறு தக்வாவில் முன்னேற்றம் கண்டு நமது பிள்ளைகளின் ஆத்மீக வாழ்க்கை மற்றும் ஆத்மீக முன்னேற்றத்திற்கு உத்திரவாதம் வழங்கும் தூய முன்மாதிரியை நிலைநிறுத்துவது நமது அன்சாருல்லாஹ் மற்றும் லஜ்னாக்களின் கடமையாகும். ஒவ்வொரு ஆண்கள் மற்றும் பெண்கள் மீதும் தத்தமது வட்டத்தில் சில பொறுப்புகள் உள்ளன. அதனை முழுமை செய்வது இருவரின் மீதும் கடமைகளாகும். பைஅத் நிபந்தனைகளின் வடிவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் அந்த செயல்திட்டத்தை நம்முன் வைத்துள்ளார்கள். அதனை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். அதன் (பைஅத் நிபந்தனைகளின்) சுருக்கத்தை நான் எடுத்து வைத்துள்ளேன்.

நஹ்னு அன்சாருல்லாஹ் (அல்லாஹ்வுக்காக நாங்கள் உதவியாளர்கள் ஆவோம்) என்று ஏன் முழக்கமிடப்பட்டது. திருக்குர்ஆனில் இதற்குரிய பதில் இரண்டு இடங்களில் நமக்கு கிடைக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான்:

**பின்னர் அவர்கள் நிராகரிப்பதை ஈஸா உணர்ந்தபொழுது, அல்லாஹ்வுக்காக எனக்கு உதவி செய்பவர்கள் யார் என்று கேட்டார். நாங்கள் அல்லாஹ்வின் உதவியாளர்களாய் உள்ளோம். நிச்சயமாக நாங்கள் அல்லாஹ்வின் மீது ஈமான் கொண்டுள்ளோம். நாங்கள் கட்டுப்பட்டவர்களாக இருக்கின்றோம் என்று நீங்கள் சாட்சி சொல்லுங்கள் என்று கூறினார். (3:53)**

இந்த மக்கள் நிராகரிப்பில் முன்னேறிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் கண்ட போது, நான் உங்களை அல்லாஹ்வின் மார்க்கத்திற்காக அழைக்கின்றேன். மேலும் நான் அல்லாஹ்வின் புறமிருந்து வந்துள்ளேன். என்னை ஏற்றுக் கொண்டு அல்லாஹ்வை நீங்கள் ஏற்றுக் கொள்வதில் தான் உங்களுக்கு வெற்றி உள்ளது எனக் கூறினார்கள். அல்லாஹ்வின் கட்டளையின்படி செயல்படுங்கள். முன்னேறுங்கள். அல்லாஹ்வின் திருப்தியைப் பெற இந்த மார்க்கத்தை ஏற்றுக் கொள்ளுங்கள் எனக் கூறிய போது அந்த மக்களில் சீடர்கள் சிலர் முன்வந்தனர். அவர்கள் நஹ்னு அன்சாருல்லாஹ் (அல்லாஹ்வுக்காக நாங்கள் உதவியாளர்கள்) என்று அந்த சீடர்கள் கூறி இவ்வாறு துஆ செய்தார்கள்.

**எங்கள் இறைவா! நீ இறக்கியவற்றின் மீது நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். நீ எங்களை சாட்சியாளர்களுடன் சேர்த்து எழுதுவாயாக! (3:53)**

தூதரைப் பின்பற்றுவது என்பது என்ன? தூதர் கொண்டு வந்த போதனையின்படி செயல்படுவதற்கு செய்யப்படுகின்ற முழு முயற்சி தான் தூதரைப் பின்பற்றுதல் ஆகும். அந்த போதனையின் உண்மைத்துவம் மீது முழுமையான நம்பிக்கை இருக்க வேண்டும்.

அடுத்து சூரா ஸஃப் -ல் இது தொடர்பாக வருகின்றது. அல்லாஹ் கூறுகின்றான்:

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்காக உதவி செய்பவர்களாக ஆகி விடுங்கள். எவ்வாறெனில் மர்யத்தின் மகன் ஈஸா (தமது) சீடர்களிடம், அல்லாஹ்வுக்காக எனது உதவியாளர்கள் யார்? என்று கேட்டார். நாங்கள் அல்லாஹ்வுக்காக உதவி செய்பவர்களாக இருக்கின்றோம் என்று சீடர்கள விடையளித்தனர். இஸ்ராயீலின் மக்களுள் ஒரு பிரிவினர் நிராகரித்து விட்டனர். இதனால் நாம் நம்பிக்கை கொண்டவர்களுக்கு அவர்களின் பகைவர்களுக்கு எதிராக உதவி செய்தோம். ஆகவே அவர்கள் வெற்றி பெற்றவர்களாகி விட்டனர்.

ஆக, நம்பிக்கையாளருக்குத்தான் வெற்றி கிடைக்கும். அது இறை அமைப்புகளுக்கு நிச்சயிக்கப்பட்ட ஒன்றாகும். எவர்கள் நம்பிக்கை கொள்கின்றார்களோ அவர்களே வெற்றி பெறுகின்றனர். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் சீடர்களின் உதாரணம் கொடுத்து முஸ்லிம்களே! நீங்கள் அல்லாஹ்வுக்காக உதவியாளர்களாக ஆகிவிடுங்கள் என்று இங்கு அல்லாஹ் கூறுகின்றான். நீங்கள் நம்பிக்கை கொண்டவர்களின் கூட்டத்தில் இணைந்து விடுங்கள். நிராகரிக்கின்ற கூட்டத்தை சார்ந்தவர்களாக ஆகிவிடக் கூடாது என்று அல்லாஹ் முஸ்லிம்களுக்கு அறிவுரை செய்துள்ளான். இன்று அல்லாஹ் நம்மை நம்பிக்கை கொண்டோரின் கூட்டத்தில் இணைத்திருப்பது அல்லாஹ் நம் மீது செய்த கருணையாகும். எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கொண்டு வந்த மார்க்கம் வெற்றி பெற ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மை தொண்டர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை முழுமையாக பின்பற்றுவது நமது கடமையாகும். உங்களது ஈமானை உறுதிப்படுத்துங்கள். உங்களது பிள்ளைகளும் அடுத்த தலைமுறையினரும் நாங்கள் அல்லாஹ்வுக்காக உதவியாளர்களாவோம் என்ற நிலைபெறும் வகையில் உங்களது பிள்ளைகளின் ஈமானை உறுதிப்படுத்துங்கள். பைஅத் நிபந்தனைகளை கண்முன் நிறுத்தி அதில் நிலைபெற்று ஒவ்வொரு நிபந்தனைகளிலும் தமது பிள்ளைகளுக்கு தூய முன்மாதரியாக நாம் திகழும் போது தான் அது சாத்தியமாகும். அப்போது தான் நஹ்னு அன்சாருல்லாஹ் நாங்கள் அல்லாஹ்வுக்காக உதவியாளர்களாவோம் என்ற முழக்கம் தொடர்ந்து கொண்டிருக்கும். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் சீடர்கள் சில காலம் மற்றும் சில தலைமுறைக்குப் பின்னர் அல்லாஹ்வின் மீதான ஈமான் மற்றும் போதனைகளின்படி செயல்படுவதிலிருந்து விலகிவிட்டனர். நான் கடந்த குத்பாவிலும் இது தொடர்பாக கூறியிருந்தேன். அரசர்கள் கிறிஸ்துவர்களானதன் விளைவாக அவர்களுக்கு சுதந்திரம் கிடைத்தது. ஏக இறைவணக்கம் மறைந்தது. அல்லாஹ்வின் மீதான நேசத்தை விட அல்லாஹ்வின் அடியார் (ஹஸ்ரத் ஈஸா நபி அவர்கள்) மீதான நேசம் மேலோங்கி அவரையே இறைவனாக்கிக் கொண்டனர். ஆனால் முஹம்மதிய மஸீஹை ஏற்றுக் கொண்டவர்கள் நீங்கள் ஏகத்துவத்தை நிலைநாட்ட அதனை பரப்புவதற்கு உங்களது எல்லா ஆற்றல்களையும் செலவிட வேண்டும். மனித படைப்பின் நோக்கமாகிய ஏக இறைவணக்கம், மற்றும் ஆத்மீக முன்னேற்றம் ஆகியவற்றை நீங்கள் உங்களிடத்தில் ஏற்படுத்த வேண்டும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மூலமாக நம் வரை வந்தடைந்த எந்த தூதுச் செய்தியினை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாக உலகில் பரப்ப இறைவன் திட்டமிட்டுள்ளானோ அந்த தூதுச் செய்தியினை நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் அன்சார்களாக திகழ்ந்து உலகில் நாம் பரப்ப வேண்டும். மேலும் அதனை உங்களிடத்தில் மாத்திரம் வைத்து கொள்ளுதல் ஆகாது. மாறாக உங்களது பிள்ளைகளும் தங்களை நஹ்னு அன்சாருல்லாஹ் நாங்கள் அல்லாஹ்வுக்காக உதவியாளர்கள் ஆவோம் என்று முழக்கமிடும் அளவிற்கு உங்களது பிள்ளைகளின் உள்ளத்தில் இறைமார்க்கத்தின் மகத்துவத்தை நிலைபெறச் செய்ய வேண்டும். அப்படி முழக்கமிடுபவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே செல்ல வேண்டும். அதன் விளைவாக உலகத்தில் இஸ்லாத்தின் வெற்றி ஒரு அழகிய கோணத்தில் மீண்டும் வெளிப்படும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பைஅத் உடன்படிக்கையில் நம்முன் வைத்த முதல் நிபந்தனையே ஷிர்க்கிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள் என்பதாகும். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் மஸீஹின் தொண்டர்கள் தலைமுறை தலைமுறையாக இந்த கொள்கையை நிலைபெறச் செய்யவில்லை. சில காலங்களிலேயே ஏகத்துவத்தை மறந்து ஷிர்க்கை பரப்புகின்ற மக்களாக அவர்கள் ஆகிவிட்டனர். ஏனென்றால் அவர்கள் அந்த மஸீஹின் போதனையில் நிலைபெறவில்லை. அவர்களின் ஈமானில் பலவீனம் ஏற்பட்டு விட்டது. உலக சுகபோகங்கள் அவர்களது வாழ்க்கையின் நோக்கமாகி விட்டது.

எனவே முஹம்மதிய மஸீஹின் தொண்டர்கள் அல்லாஹ்வுடனான தொடர்பில் தன்னிடத்திலும் குறைவு ஏற்படும் படி செய்து விடக் கூடாது. தமது பிள்ளைகளிடத்திலும் குறைவு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் அந்த சீடர்களைப் போன்றும் அவர்களுடைய சந்ததியினரைப் போன்றும் ஈமானில் பலவீனம் ஏற்பட்டு ஷிர்க் – இணைவைத்தல் தோன்றி விடும். நீங்கள் பாருங்கள்! முஸ்லிம்களில் பலர் தங்களை முஸ்லிம்கள் என்று கூறிக்கொண்டு கபர் வணங்கிகளாகவும், பீர் வணங்கிகளாகவும் மேலும் பல வழிகளிலும் ஷிர்க் செய்யக்கூடியவர்களாக உள்ளனர். ஹஸ்ரத் மஸீஹ மவ்வூது (அலை) அவர்கள்

இதுபோன்ற ஷிர்க்கிலிருந்து நம்மை பாதுகாத்து விட்டார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உயர் நல்லொழுக்கம் மற்றும் அடியார்களுக்குரிய உரிமைகளை வழங்குவதன் பக்கம் கவனமூட்டியுள்ள அதே சமயத்தில் நீங்கள் என்னுடைய பைஅத்தில் வரவிரும்புகின்றீர்கள் என்றால் ஷிர்க்கிலிருந்து விலகுவதுடன் ஐவேளை தொழுகைகளை தவறாமல் இறைவன் மற்றும் இறைதூதரின் கட்டளைக்கேற்ப நிறைவேற்றி வாருங்கள் என்று ஒவ்வொரு அஹ்மதிக்கும் ஜமாஅத்தில் இணைகின்ற ஒவ்வொருவருக்கும் கூறியுள்ளார்கள். தொழுகை தொடர்பாக இறைவன் என்ன கட்டளை வழங்கியுள்ளான்? அல்லாஹ் சூரா ஃபாத்திஹாவில் இய்யாக நஃபுது வஇய்யாக நஸ்தயீன் என்ற துஆவை மனிதனுக்கு கற்றுத் தந்துள்ளான். உன்னுடைய கட்டளைக்கேற்ப உன்னை வணங்குவதற்கு உன்னுடைய உதவியின் அவசியம் உள்ளது. எனவேதான் இய்யாக நஸ்தயீன் – உன்னிடத்தில் நாங்கள் உதவி தேடுகிறோம். இறைவணக்கத்திற்காக இறைஉதவியின் வேண்டுதலின் பக்கம் கவனம் இருக்கும் போது யுகீமூனஸ்ஸலாத்த – தொழுகையை நிலைநாட்டுங்கள் என்ற தொழுகை தொடர்பான இறைகட்டளையையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அதன் விளைவாக தொழுகையை நிலைநாட்டுதலின் தூய முன்மாதிரிகளும் வெளிப்படும். அதாவது ஐவேளை தொழுகைக்குரிய நேரத்தில் தொழுகையை நிலைநாட்ட வேண்டும். தொழுகையை குறிப்பாக பணிகளுக்கிடையில் வருகின்ற தொழுகைகளை பாதுகாத்துக் கொள்ளுங்கள் என அல்லாஹ் திருக்குர்ஆனில் ஓரிடத்தில் கூறுகின்றான். தொழுகைகளை கருத்தில் கொண்டு பேணுவது குறிப்பாக பணிகளுக்கு இடையிலான தொழுகைகளை பாதுகாப்பது ஒவ்வொரு நம்பிக்கையாளரின் கடமையாகும். பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போதும், சோர்வு மற்றும் தூக்கத்தின் நேரத்திலும் வருகின்ற தொழுகைகளை பாதுகாப்பது மிகவும் அவசியமாகும். ஸலாத்துல் உஸ்தா என்ற இந்த சொல்லில் எல்லா தொழுகைகளையும் பேணுவது கடமையாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தொழுகைகளை பேணுவது ஒரு நம்பிக்கையாளரின் ஈமானின் முன்னேற்றத்திற்கு மட்டும் காரணமாக இருப்பதில்லை. மாறாக தொழுகைகளுக்குரிய உரிமைகளை வழங்கியவாறு தொழுது வருவது அவரது சந்ததிகளுக்கு தூய முன்மாதிரியாக திகழ்வது மாத்திரமல்லாமல் அவருடைய சந்ததிகளை துஆக்களின் வாரிசுதாரர் ஆக்கி விடுகின்றது. மேலும் சந்ததிகளின் ஒளிமயமான எதிர்காலத்தின் பாதுகாப்பிற்குரிய ஏற்பாட்டை செய்து தருகின்றது.

தொழுகைக்குரிய உரிமையை வழங்குதல் என்பது என்ன? தொழக்கூடிய பலர் இருக்கின்றனர். மேலும் தொழுவதற்கு மறுத்தும் விடுகின்றனர். அல்லது தொழாமல் இருப்பதற்கு நூறு சாக்குப்போக்குகளை கூறுகின்றனர். ஒழுக்கங்களை சீர்படுத்துகின்ற தொழுகைகளை தொழுவது என்பது, தொழுகைகளை பேணுவது மற்றும் தொழுகைக்குரிய உரிமையை வழங்குவது என்பதில் அடங்கும். மனைவிக்குரிய உரிமைகளையும் வழங்குபவராக இருக்க வேண்டும். பிள்ளைகளுக்குரிய உரிமையை வழங்குபவராகவும் இருக்க வேண்டும். நான் கூறியது போன்று 40 வயது என்பது பக்குவமடைந்த வயதாகும். ஆனால் இந்த வயதை அடைந்தவர்களை நாம் ஓர் ஆய்வு மேற்கொண்டால் இந்த வயதிலும் தமது தொழுகைகளை பேணாத பலர் இருப்பார்கள். அவர்கள் தமது கடமைகளை நிறைவேற்றாத போது தமது பிள்ளைகள் நன்மையில் நிலைநிற்க வேண்டும் என்று அவர்கள் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? அல்லது ஜமாஅத்தோடு தொடர்புடையவர்களாக இருப்பார்கள் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? அவர்களின் பிள்ளைகள் அஹ்மதிய்யத்தில் நிலைநிற்பார்கள் என்பதற்கு என்ன உத்திரவாதம் உள்ளது? குறிப்பாக அன்சாருல்லாஹ் அமைப்பைச் சார்ந்தவர்களது சந்ததிகள் அதிலிருந்து விலகியுள்ளார்கள். தமது தொழுகைகளைப் பேணுவதோடு தமது பிள்ளைகளின் தொழுகைகளை கண்காணிப்பதும் பெற்றோரின் கடமையாகும். ஆனால் இந்த கடமைகளை நிறைவேற்றுவதற்கு பிள்ளைகளை குழந்தைப் பருவம் முதலே தர்பிய்யத் மற்றும் கண்காணித்தல் அவசியமாகும். குழந்தைப் பருவத்தில் தொழுகையின் முக்கியத்துவம் கூறப்படவில்லை என்றால் அக்குழந்தைகள் இளமைப் பருவத்தை அடையும் போது குறிப்பாக இளைஞர்களிடம் அவர்களது பெற்றோர்கள் கடினத்தை மேற்கொள்ளும் அவசியம் ஏற்படுகிறது. அதன் விளைவாக அப்பிள்ளைகள் மேலும் அதிகமாக வழிகெட்டு விடுகின்றனர் என்று பெற்றோர்கள் முறையிடுகின்றனர். அடுத்து சில தந்தைமார்கள் வெளிப்படையில் தொழுகைகளை நிறைவேற்றுவதில் சிறந்தவராக இருப்பார்கள். ஆனால் அவரது மனைவி மற்றும் பிள்ளைகளிடம் அவரது தீய நடத்தையின் காரணமாக பிள்ளைகள் தந்தையிடமிருந்து விலகிச் சென்று

விடுவது மட்டுமல்லாமல் தொழுகை எனது தந்தையை கடின உள்ளம் கொண்ட இயல்புடையவராக ஆக்கி விட்டது என எண்ணுமாறு செய்து விடுகின்றார்கள். நாம் உயிர்த்தியாகிகளைப் பற்றிய விஷயங்களை கேட்கும் போது ஒரு விஷயம் குறிப்பாக நமக்கு தெரிய வருகின்றது. அது என்னவென்றால் இறைவணக்கம் மற்றும் திக்ரே இலாஹி (இறைவனை நினைவு கூறுதலின்) பக்கம் கவனம் ஏற்படும். மேலும் தத்தமது பிள்ளைகளுடன் அவர்கள் வைத்திருந்த உன்னதமான அன்பிற்குரிய தொடர்பு மற்றும் தமது பிள்ளைகளை மார்க்கப் பற்றுள்ளவர்களாக ஆக்குதல் போன்றவை ஆகும். மேலும் அவர்களின் பிள்ளைகளிடத்தில் தமது தந்தைகளின் நல்ல தாக்கமும் இருக்கின்றது. அன்சாருல்லாஹ்விற்குரிய கடமைகளை நிறைவேற்றக் கூடியவர்களாக அவர்கள் இருந்தனர்.

எனவே நான் மீண்டும் அன்சாருல்லாஹ் உறுப்பினர்களிடம் கூறுகின்றேன். நீங்கள் அன்சாருல்லாஹ்விற்குரிய கடமைகளை நிறைவேற்ற விரும்பினால் உங்களது தொழுகைகளையும் பாதுகாத்து வாருங்கள். உங்களது சந்ததிகளையும் தொழுகையைப் பேணக்கூடியவர்களாக ஆக்குங்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பைஅத் நிபந்தனையில் கவனமூட்டியிருப்பது போன்று தொழுகைகளை நிறைவேற்றி விடுவதுடன் தஹஜ்ஜுத் மற்றும் நஃபில் தொழுகையின் பக்கமும் கவனம் செலுத்துங்கள். 65, 70 வயதடைந்த பிறகு ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் அன்சார்கள் தஹஜ்ஜுத் தொழவும் செய்யலாம். அதற்கான எண்ணமும் வரலாம். ஆனால் அன்சாருல்லாஹ்வின் ஆரம்ப நிலையிலும் தஹஜ்ஜுத் தொழுகையின் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமாகும். அல்லாஹ்வின் அருளால் நிச்சயமாக நமது ஜமாஅத்தில் குறிப்பிட்ட எண்ணிக்கையில் தஹஜ்ஜுத் தொழக்கூடியவர்கள் இருக்கின்றார்கள். மாறாக குத்தாம்களிலும் அப்படிப்பட்ட ஒரு பிரிவினர் உள்ளனர். ஆனால் இந்த எண்ணிக்கை அன்சாருல்லாஹ்வினரிடம் பெரும்பான்மையாக இருக்க வேண்டும். 40 வயதிற்கு மேற்பட்ட மக்களுக்கு அன்சாருல்லாஹ் என்று பெயரிடப்பட்டதிலும் நஹ்னு அன்சாருல்லாஹ் (நாங்கள் அல்லாஹ்வுக்காக உதவியாளர்களாவோம்) என்ற அறிவிப்பிலும் நாங்கள் அல்லாஹ்வின் மார்க்கத்திற்காக அசாதாரண தியாகங்கள் செய்வதற்கு தயாராக உள்ளோம் என்ற தூதுச் செய்தி உள்ளது. மார்க்கத்தின் வெற்றிக்காக எல்லா வகையான முயற்சி செய்வதற்கும், தமது எல்லா ஆற்றல்களை செலவிடுவதற்கும் தயாராக உள்ளோம் என்ற தூதுச் செய்தி உள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மார்க்கத்தின் வெற்றி துஆவின் மூலமே நடைபெறும் என்று கூறியுள்ளார்கள். எனவே தப்லீக் செய்வதோடு துஆ செய்வதன் பக்கம் ஒரு சிறப்பான உணர்வுகளோடு கவனம் செலுத்துவது அவசியமாகும். அன்சாருல்லாஹ்வின் பருவம் பக்குவமடைந்த பருவமாகும். எனவே இந்நிலையை அடைந்த பிறகு தற்காலிகமான முன்னேற்றங்கள் மற்றும் முயற்சிகளில் திருப்தி அடைந்து விடக்கூடாது. மாறாக, தன்னை ஆய்வு செய்து தனது கடமைகளை நிறைவேற்ற நிலையான முயற்சி செய்ய வேண்டும். தொழுகைகள் மற்றும் நஃபில்கள் மூலமாகத்தான் துஆக்களுக்குரிய உரிமைகளை வழங்க முடியும்.

அடுத்து ஒரு அஹ்மதி திருக்குர்ஆனின் கட்டளைகளுக்கு முழுமையாக கட்டுப்படக்கூடியவர் ஆவார் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். அதற்கு திருக்குர்ஆனோடு ஓர் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வது அவசியமாகும். இந்த இறை வேதத்தை தினமும் ஓதுவதும் புரிந்து கொள்வதும் அவசியமாகும். எனவே அன்சாருல்லாஹ் அமைப்பில் நுழைந்த ஒவ்வொரு அஹ்மதியும் தினமும் எல்லா நிலையிலும் திருக்குர்ஆன் ஓதுவதை கடமையாக்கிக் கொள்ள வேண்டும். அன்சாருல்லாஹ் அமைப்பைச் சார்ந்தவர்களுக்கு மாத்திரம் இந்த கட்டளை இல்லை. மாறாக, லஜ்னாக்கள் (அஹ்மதி பெண்கள்) மற்றும் ஜமாஅத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் அது பொருந்தும். குறிப்பாக இளம் தலைமுறையினருக்கு தர்பிய்யத் வழங்கக்கூடிய ஒவ்வொரு ஆணும், பெண்ணும் இதனை கடமையாக்கிக் கொள்ள வேண்டும். அவர்கள் தினமும் திருக்குர்ஆனை தினமும் ஓதி தமது பிள்ளைகளுக்கு ஒரு முன்மாதிரியை நிலைநிறுத்த வேண்டும். இதன் மூலமாக ஒவ்வொரு அஹ்மதியும் திருக்குர்ஆன் ஓதுவதன் பரக்கத்துகளிலிருந்து, தான் பலன் பெறுவது மட்டுமல்லாமல் தமது பிள்ளைகளுக்கு ஒரு தூய முன்மாதிரியாக திகழ்ந்து தமது பிள்ளைகள் திருக்குர்ஆனிலிருந்து பயன் பெறுவதற்கும் வழிவகை செய்து விட முடியும்.

நான் எடுத்து வைத்த பைஅத் நிபந்தனைகளின் சுருக்கம் என்பது நான் ஏற்கனவே கூறியது போன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓர் அஹ்மதியிடம் எதிர்பார்க்கும் குறைந்தபட்ச தகுதியாகும். அன்சார்கள் இவ்விஷயத்தில் உயர் தரத்தை அடைய வேண்டும். அதேபோன்று எவ்வாறு ஆண்கள் மீது குடும்பத் தலைவன் என்ற முறையில் பிள்ளைகளின் தர்பிய்யத்திற்கு முக்கிய பொறுப்பு உள்ளதோ அதேபோன்று பெண்களுக்கும் முக்கிய பொறுப்பு இருக்கின்றது. மாறாக ஆண்களை விட அதிகமாக பெண்களுக்கு பொறுப்பு உள்ளது என கூறலாம். ஏனென்றால் ஒரு பிள்ளையின் குழந்தைப் பருவம் தாயின் மடியில்தான் கழிகின்றன. அதேபோன்று தாயுடன் தான் தங்களது நேரத்தைக் கழிக்கின்றனர். எனவே ஒரு தாயின் மீது பொறுப்பு அதிகமாகி விடுகின்றது. தாயிற்கு மார்க்கப் பயிற்சி இருந்தால், மார்க்கக் கல்வி இருந்தால் பெரும்பாலும் பிள்ளைகளும் மார்க்கப் பற்றுள்ளவர்களாகவே இருப்பார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

சில பெண்கள் தமது ஈமானின் ஆற்றலின் காரணமாக ஆண்களை விட சிறந்து விளங்குவதை நான் கண்டிருக்கின்றேன். மேன்மை என்பது ஆண்களுக்கு மட்டும் உரியதல்ல. ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் எவர் ஈமானில் முன்னேறி விடுவாரோ அவர் மேன்மையை அடைந்து விடுவார்.

எனவே நம்முடைய ஒவ்வொரு பெண்களும் இந்நிலையை அடைய முயற்சி செய்ய வேண்டும். ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் ஒருவரையொருவர் முந்திக் கொள்ள போட்டி போட்டுக் கொண்டிருக்க வேண்டும்; முயற்சி செய்ய வேண்டும். இந்நிலையை உங்களிடத்தில் நீங்கள் ஏற்படுத்திக் கொண்டால் புதிய தலைமுறைகள் எவ்வாறு இறை நெருக்கம் பெற்றவர்களாக இருப்பார்கள் என்பதை நீங்களே கண்டு கொள்வீர்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வைத்துள்ள பைஅத் நிபந்தனைகள் ஆண்களுக்கு மட்டும் தான் பெண்களுக்குரியது கிடையாது என்று கூற முடியாது. மாறாக அந்த நிபந்தனைகள் அனைத்து தரப்பினருக்கும் உரியதாகும். எனவே எவரெல்லாம் நன்மையில் முன்னேறக் கூடியவர்களாக இருப்பாரோ அவர் இறை அன்பினை ஈர்த்தவாறு தமது இம்மை மறுமையை சரி செய்து கொள்வார். மேலும் தமது சந்ததிகளின் பாதுகாப்பு மற்றும் தக்வாவின் வழி நடக்கும் ஏற்பாட்டினை அவர் செய்து விடுவார். எனவே நமது பெண்கள் தம்மிடத்தில் இந்த தரத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். கணவனும், மனைவியும் பிள்ளைகளின் தர்பிய்யத் விஷயத்தில் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு வழங்கி, ஒருவர் மற்றவருக்காக துஆ செய்தவாறு முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். ஆண் மற்றும் பெண்களில் ஒருவர் தமது கடமையை நிறைவேற்றா விட்டாலும் அவர் தமது உடன்படிக்கையை முழுமை செய்ததன் காரணமாக கேள்வி கேட்கப்படுவார். அல்லாஹ் நம் அனைவருக்கும் உடன்படிக்கையை முழுமை செய்யும் பாக்கியத்தை வழங்குவானாக. இக்காலத்தின் இமாமோடு உண்மையான, விசுவாசமான தொடர்பை வழங்குவானாக. மேலும் அன்னாரின் எதிர்பார்ப்புகள் மற்றும் போதனைகளுக்கேற்ப நாம் அமல் செய்யக் கூடியவர்களாக திகழ்வோமாக. மேலும் நமது ஒரு தலைமுறைக்குப் பின்னர் நமது அடுத்த தலைமுறை தொடர்ந்து ஏகத்துவத்தை நிலைநாட்ட முயற்சி செய்யக் கூடியதாக இருக்கட்டுமாக!

இறுதியில் நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஒரு மேற்கோளை முன் வைக்கிறேன். அன்னார் கூறுகின்றார்கள்:

நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் உங்கள் மார்க்கத்தை மறைத்து மற்ற சமுதாயங்களுடன் பழகி வந்தால் நீங்கள் வெற்றி பெற முடியாது.

அதாவது ஒருபோதும் தாழ்வு மனப்பான்மை மற்றும் பலவீனத்தின் காரணமாக மார்க்கத்தை மறைத்தல் கூடாது. தமது மார்க்கப் போதனையில் எந்த வெட்க உணர்வும் கொள்ளுதல் கூடாது. மாறாக தப்லீக் மைதானத்தில் தப்லீகின் பக்கம்தான் கவனம் செலுத்த வேண்டும். அதன் மூலமாகத்தான் வெற்றி கிடைக்கும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவன்தான் வெற்றி வழங்கக்கூடியவனாவான். அவன் திருப்தி கொண்டு விட்டால் முழு உலகமும் வெறுத்தாலும் பொருட்படுத்தாதீர்கள். இக்கட்டளையை செவி ஏற்கின்ற ஒவ்வொருவரும் நினைவில் கொள்ளுங்கள். உங்களது ஆயுதம் துஆவாகும். எனவே துஆ செய்து கொண்டிருங்கள். நினைவில் கொள்ளுங்கள். பாவங்கள் மற்றும் தீமைகளை அறிவுரைகளினாலோ, வேறெந்த வழிமுறைகளாலோ நீக்க முடியாது. அதற்குரிய ஒரே வழி துஆ தான்.

அதாவது அறிவுரைகள் மற்றும் போதனைகள் பாவங்களை அகற்றி விடாது. மாறாக மனிதனுள் உணர்வு ஏற்படும் போதும் பின்னர் துஆ செய்யும் போதுதான் பாவங்கள் நீங்கும். அடுத்து சந்ததிகளுக்காகவும் துஆ செய்வதன் மூலம் அவர்களிடமும் சீர்திருத்தம் ஏற்பட்டு விடும்.

இக்காலத்தில் நன்மையின் பக்கம் கவனம் ஏற்படுவதும், தீமையைக் கைவிடுவதும் சாதாரண விஷயமல்ல. அதற்கு ஒரு மாற்றம் தேவை. அந்த மாற்றம் இறைவனின் கையில் உள்ளது. அந்த மாற்றம் துஆவின் மூலமாகத்தான் கிடைக்கும். எனவே நமது ஜமாஅத்தைச் சார்ந்தவர்கள் இரவில் அழுது அழுது துஆ செய்ய வேண்டும். என்னிடத்தில் துஆ செய்யுங்கள். நான் ஏற்றுக் கொள்கிறேன் என்பது இறை வாக்குறுதியாகும். பொதுவாக உலகத்திற்காக துஆ செய்வது தான் துஆ என்று பெரும்பாலும் மக்கள் நினைக்கின்றனர். அவர்கள் உலகின் புழுக்கள் ஆவார்கள். எனவே அவர்களால் அதை விட்டு மேலே வர முடியாது. மார்க்கத்திற்காக துஆ செய்வது தான் அசல் துஆவாகும். நாம் பாவங்கள் செய்து விட்டோம். துஆவினால் என்ன நிகழும்? நாம் எவ்வாறு மாற்றம் அடைய முடியும் என நினைக்காதீர்கள். இது தவறாகும். பாவம் என்பது ஆடையில் ஏற்பட்ட அழுக்கை போன்றதாகும். அதனை துவைப்பதனால் சுத்தப்படுத்த முடியும்.

அதாவது பாவங்கள் அகல வேண்டும் என்ற எண்ணம் இருந்து வந்தால் துஆவின் பக்கம் கவனம் இருந்தால் பாங்களை சுத்தப்படுத்த முடியும்.

சில நேரங்களில் பாவங்களிலிருந்து மனிதன் தப்பித்து விட முடியும். ஏனென்றால் மனிதனின் இயல்பில் தூய்மை உள்ளது. பாருங்கள். தண்ணீர் எவ்வளவுதான் சூடாக இருந்தாலும் அதனை நெருப்பின் மீது ஊற்றும் போது அது நெருப்பை தணித்து விடுகின்றது. ஏனென்றால் நெருப்பைத் தணிக்கின்ற தன்மை தண்ணீரினுள் உள்ளது. இதே போன்றே எல்லா மனிதனின் இயல்பினும் இந்த தன்மை இருக்கின்றது. எப்படிப்பட்ட மனிதராக இருந்தாலும் இயல்பில் வைக்கப்பட்ட அந்த தூய்மை எங்கும் சென்று விடுவதில்லை. எனவே நீங்கள் எப்படிப்பட்ட இயல்பு கொண்டவராக இருந்தாலும் அழுது துஆ செய்தால் அல்லாஹ் பாவங்களை நீக்கி விடுவான்.

அல்லாஹ் நமக்கு மார்க்க வெற்றிக்காக துஆ செய்யும் பாக்கியத்தை வழங்குவானாக. தம்முடைய சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் செலுத்தி தமக்காகவும், தமது பிள்ளைகளுக்காகவும் துஆ செய்யும் பாக்கியத்தை வழங்குவானாக. மேலும் இந்த உணர்வுடன் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை உலகின் முன் வைக்கக் கூடியவர்களாக நாம் திகழ்வோமாக. மேலும் அதன் சிறந்த விளைவையும் அல்லாஹ் வெளிப்படுத்துவானாக. ஆமீன்.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 01.10.2010**

Translated by : **Maulavi ABDUR RAHMAN TAHIR**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**

ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**